**கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டம் - 2015**

கேந்திர நகரங்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 5428 - எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II(பீ)(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சும் தற்போதைய மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. இலங்கையில் பங்குபற்றல் நகர பிராந்தியங்களில் தெரிவுசெய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆகவே, செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய பங்குபற்றல் நகர பிராந்தியங்களாக கண்டி நகரமும் காலி நகரமும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 25,162.48 மில்லியனிற்கு சமமான எஸ்டிஆர் 95 மில்லியன் (ஐ.அ.டொலர் 192.08 மில்லியன்) ஆனதுடன் அதில் ரூபா 19,257 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 147 மில்லியன் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் வழங்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 மே 05 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான

பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான

இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்தரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தவேண்டிய ரூபா 939,744 தொகை நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டுவதற்கு பதிலாக செயற்திட்ட நிதிய கணக்கின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய வருடத்தில் ரூபா 16.39 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடானது 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1.77 மில்லியனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் 2007 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய ஈஆர்டி/2007/2 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் அடுத்தவரும் ஆண்டின் மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் கண்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 02 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 24 ஆம் பந்தியால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய கொள்வனவு நிர்வாக கையேடு 2015 திசெம்பர் 31 இலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 அன்பளிப்பு நிதியங்களின் பூர்த்தியாக்கல் மீதான சர்ச்சைகள்**

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 சனவரி 01 இல் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியில் செயற்திட்டத்தால் பராமரிக்கப்பட்ட விஷேட டொலர் கணக்கில் ரூபா 871.83 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 6.65 மில்லியன் தொகையான மீதி இருந்தது. இதற்கு மேலதிகமாக, 2015 யூன் 10 இல் ரூபா 503.25 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 03 மில்லியன் கட்டுநிதி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இதில் ரூபா 475.92 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 3.48 மில்லியன் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மீளப்பெறப்பட்டிருந்தது. ஆகையால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கான நிதி தேவைகளின் மந்தமான எதிர்வுகூறலால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 888.68 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 6.16 மில்லியன் தொகையான மீதி விஷேட டொலர் கணக்கில் மிகையாகவிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 147.00 | 19,257.00 | 3,450.00 | 2.78 | 367.99 | 2.93 | 387.29 |
| இலங்கை அரசாங்கம் | 45.08 | 5,905.48 | 960.00 | 0.69 | 91.02 | 1.01 | 132.94 |
| | **192.08** | **25,162.48** | **4,410.00** | **3.47** | **459.01** | **3.94** | **520.23** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குறித்துரைக்கப்பட்ட செயற்திட்டக் காலப்பகுதியினுள் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பொறுப்புக்களை நிர்ணயித்து செயற்திட்டத்தின் முழுக் காலப்பகுதியையும் மேவுகை செய்யும் வகையில் நிதி மற்றும் பௌதீக ரீதியான இலக்குகளை சுட்டிக்காட்டி மாதாந்தம், காலாண்டு, மற்றும் அரையாண்டு போன்றன ரீதியான விரிவான விபரமான திட்டம் தயாரிக்கபபட வேண்டிய போதிலும் அத்தகைய திட்டம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும் செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் 11 ஆம் பந்தியால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் வேலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு மீளாண்வாண்டிற்கான விரிவான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் மீளாய்வாண்டின் போது ரூபா 459.01 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 4,410 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மீளாய்வாண்டின்போது இலங்கை அரசாங்கத்தின் பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மேற்குறிப்பிடப்பட்ட தகவலின் பிரகாரம், கடனளிக்கும் முகவரால் ஒதுக்கப்பட்ட ரூபா 19,257 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 147 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 02 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 387.29 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 2.93 மில்லியன் மாத்திரமே செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடங்கி 02 வருடங்கள் கடந்த பின்னர் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கண்டி மற்றும் காலி நகரங்களில் தெரிவு செய்யப்பட்ட நகர சேவைகள் மற்றும் பொது நகர இடவசதிகளை முன்னேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது சில நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட வழிகாட்டல் குழுவின் 06 கூட்டங்கள் மற்றும் செயற்திட்ட ஆலோசனை குழுவின் 04 கூட்டங்கள் மீளாய்வாண்டின் போது நடைபெற்றிருந்தது என அவதானிக்கப்பட்டிருந்தது. எனினும், உரிய மாநகர சபைகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை போன்றவற்றின் பிரதிநிதிகள் மேலே குறிப்பிடப்பட்ட குழுக்களுக்காக நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட முகவர்களுக்கிடையில் பொறுப்புக்களை பகிர்ந்தளிப்பதன் மூலம் செயற்திட்டத்தின் சுமூகமான செயற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு குழுக்களின் கூட்டங்களில் பயனுள்ள தீர்மானங்கள் எடுக்கப்படுவதற்கு முடிந்திருக்கவில்லை.

(ஆ) இரண்டு வருடங்களுக்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த காலி நகரத்திலுள்ள பிரதான கால்வாய்கள் மற்றும் வடிகாலமைப்பு முறைமையின் புனரமைப்பு வேலைகள் 2016 ஏப்ரல் 30 இலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 03 வீதிகளின் புனரமைப்பு, றம்பார்ற் துறைமுக நடைபாதைகளின் மீள் நிர்மாண வேலைகள் மற்றும் காலி மாநகர சபை பிரதேசத்தின் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளின் முன்னேற்ற வேலைகள் மீளாய்வாண்டின் போது தொடங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஏப்ரல் 30 இலும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. காலி நகரில் மீள் நிர்மாணம் செய்யப்பட வேண்டிய 05 பாலங்களில் சமஹிவத்த, கனம்பிற்றிய மற்றும் வெலிகஹவிலுள்ள 03 பாலங்களின் மீள்நிர்மாண வேலைகளில் 50 சதவீத வேலைகள் மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதிலும் சராசரியாக 07 சதவீதமான மந்தமான முன்னேற்றத்தை காட்டியிருந்தது.

(இ) ஆர்துார் இருக்கைக்காட்சிக் கப்பல் தளத்தின் புனரமைப்பு வேலைகள் மற்றும் கண்டி நகர் பிரதேசத்திலுள்ள நீர் வழங்கல் முறைமையின் வடிவமைப்பும் நிர்மாணமும், மேற்பார்வை, பெரிதாக்குதல் மற்றும் புனரமைப்பு வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அத்திகதியிலுள்ளவாறு முறையே 40 சதவீதம் மற்றும் 85 சதவீதமான மந்தமான முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்டி நகரத்தின் ரூபா 373.80 மில்லியன் கிரயத்திலான அபிவிருத்தி வேலைகள் மீதான 04 நிர்மாணம் மற்றும் ஆலோசனை ஒப்பந்தங்களிற்காக விலைமனுவை திறந்து உடன்படிக்கையில் கைச்சாத்திடும் செய்முறை 03 மாதங்கள் தொடக்கம் 06 மாதங்கள் வரையிலான வீச்சுக் காலதாமதத்துடன் அமுலாக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக ரூபா 163.82 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட காலி நகரத்தின் அபிவிருத்தி வேலைகளிற்கான 03 நிர்மாண மற்றும் ஆலோசனை ஒப்பந்தங்கள் 3 மாத காலத்தாமதத்துடன் செய்முறைப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் சுவீகரிப்பு நோக்கங்களிற்காக 03 காணிகளின் அளவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் கண்டியிலுள்ள லுாயிஸ் பேரிஸ் மாவத்தையிலுள்ள இயற்கை தரைத்தோற்ற வேலைகள் முறையே 06 மாதங்கள் மற்றும் 08 மாதங்கள் காலதாமதத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. காலி நகரத்திலுள்ள பாலங்களிற்கான தேசிய வேலியை ஸ்தாபிப்பதுடன் தொடர்புடைய வேலைகள் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 13 மாதங்கள் வரையான காலதாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) கண்டிநகரத்திலுள்ள 03 நில நீர்த்தேக்கங்களின் நிர்மாண வேலைகள் மீது கணக்காய்வாளார்களால் மேற்கொள்ளப்பட்ட கள பரீட்சிப்பின் போது நிர்மாண நோக்கங்களுக்காக வேண்டப்பட்ட அளவுகளை விட மேலதிகமாக ரூபா 13.40 மில்லியன் பெறுமதியான 67 தொன்கள் உருக்கு சட்டங்கள் 2015 மார்ச் 13 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இதன் விளைவால் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2.68 மில்லியன் வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் தேவையில்லாமல் கிரயங்களை அதிகரித்துக் காட்டி செலுத்தப்பட்டிருந்தது. மேலே குறிப்பிடப்பட்ட நிர்மாண வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தக்காரரின் 01 ஆம் இலக்க கோரிக்கையின் கீழான அளவீட்டுப்பட்டியலின் 09 விடயங்கள் மீது ரூபா 1.2 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் கொழும்பிலிருந்து யாழ்பாணத்திற்கான விமானப் பயணத்திற்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பில் ரூபா 209,000 தொகை

செலவழிக்கப்பட்டிருந்தது. எனினும் விமானப் பயணத்தின் அவசியத்தன்மை தொடர்பாக கணக்காய்விற்காக விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பெறுகைகளில் செயற்திட்ட கண்காணிப்பு பிரிவில் பகுதிநேர அடிப்படையில் வேலை செய்த 05 அலுவலர்களுக்கு ரூபா 700,920 தொகை மிகையூதியமாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் தன்மையை தீர்மானிப்பதற்கு கடமைப் பட்டியல் மற்றும் உசாத்துணைகள் கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

### 3.5 சுவீகரிக்கப்பட்ட காணி மீதான இழப்பீட்டுக் கொடுப்பனவு

செயற்திட்டமானது ரூபா 662 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 1,632 நிலத்துண்டுகளை சுவீகரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டு இறுதிவரை 820 நிலத்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் காணி சுவீகரிப்பிற்கான ரூபா 235 மில்லியன் மொத்த தொகையில் மேலதிக இழப்பீடுகளாக ரூபா 188 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் காணி சுவீகரிப்பு மீள்குடியேற்றல் குழுவின் பரிந்துரைகளின் கீழ் 03 பிரதேச செயலகங்களின் 14 நிலத்துண்டுகளிற்காக சுவீகரிக்கப்பட்ட நிலங்களின் பரப்பு மற்றும் ரூபா 8.07 மில்லியன் மேலதிக இழப்பீட்டு கொடுப்பனவிற்கான காரணங்கள் போன்ற விபரங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

2014 சனவரி 29 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் செயற்திட்ட பதவியணியினருக்கான ஆட்சேர்ப்பு திட்டம் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் 2016 மே வரை பிரதம முகாமைத்துவ நிலைகளின் 16 பதவிகளில் 8 பதவிகள் வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.

### 3.7 நிதி மற்றும் பௌதீக கட்டுப்பாடு மீதான விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தை பதிவு செய்வதற்கு முறையான ரீதியில் நிலையான சொத்துக்களுக்கான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2010 யூலை 20 இன் 05 ஆம் இலக்க சுற்றறிக்கையால் வேண்டப்பட்டவாறு செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.